# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2083/4 - 2018 අගෝස්තු මස 07 වැනි අඟහරුවාදා - 2018.08.07

*2083/4 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இல.: 3/6/2016/7(2/2018).*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டப்ளியூ/140.*

ஒரு பொது விடயத்திற்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியுள்ளதனால் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் படி இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹாவெல பிரதேச செயலாளர் பிரிவில் வட்டார இல. 888, தொவட்டேகெதர கிராம அலுவர் பிரிவில் அமைந்துள்ள நில்லக்கேகம கிராமத்தின் குருநாகல் மாவட்ட நில அளவை அதிபதியால் திகதி 2018. 06. 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கு. 2395 இல் குறிப்பிடப்பட்ட 0.0205 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 01 தொடக்கம் 02 வரையான காணித்துண்டுகள் 02 (இரண்டு) இன் விபரங்கள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர்: வரகஸ்பிற்றியகேன மற்றும் அஸ்வெட்டும; விபரம்: தோட்டம் மற்றும் நிரந்தரமற்ற பயிர்ச்செய்கை ; உரிமை கோருவோர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. பி. எஜ். தயா மெனிகே கேரத், இல. 135/5, திக்கலே வத்த, கொழும்பு வீதி, பொத்துகெர; விஸ்தீரணம் : 0.0068 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர்: எல்கேன மற்றும் அம்பகஹாமுலகேன; விபரம்: தோட்டம் மற்றும் நிரந்தரமற்ற பயிர்ச்செய்கை; உரிமை கோருவோர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜி. சிரியானி புஸ்ப குமாரி, நில்லக்கேகம, லின்தகும்புர, மகாபிற்றிய, பொத்துகெர; விஸ்தீரணம் : 0.0137 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி பொல்கஹாவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், 9 ஆம் பிரிவின் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி முதல் என்னால் அறிவிக்கப்படும் திகதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் தாமாகவோ அல்லது காரியக்காரர் மூலமாகவோ எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைக்கு உரிமை கோருபவரினால் முகவராக அனுப்பப்படுபவர் உரிமை குறித்தொதுக்கப்பட்டமையை கடிதம் மூலமாக ரூபிக்காவிட்டால் முகவராக அனுப்பப்படுபவரின் கூற்று




*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அல்லது சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை குறித்து கவனம் செலுத்தவும்.

அனோமா திஸ்ஸாநாயக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
பொல்கஹாவெல.

பிரதேச செயலகம்,
பொல்கஹாவெல.

08 - 714

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/1/1/32-E.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2015/எச்டப்ளியூ/69.

ஒரு பொது விடயத்திற்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியுள்ளதனால் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் படி இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில், குருணாகல் பிரதேச செயலாளர் பிரிவில் வட்டார இல. 808, வெகரபென்த மற்றும் 836, தெலியாகொண்ண கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அம்பலான்பிற்றிய கிராமத்தின் குருணாகல் மாவட்ட நில அளவை அதிபதியால் 2018. 05. 28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கு. 2366 இல் குறிப்பிடப்பட்ட 0.5457 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 130 தொடக்கம் 131 வரையான காணித்துண்டுகள் 02 (இரண்டு) இன் விபரங்கள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 130**
காணியின் பெயர்: கொலபெலெல்லகந்தவத்த; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை ; உரிமை கோருவோர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: எச். பி. என். கே. பதிரன மற்றும் பி. எஸ். பி. மொனரவில, இல. 79/18, கொழும்பு வீதி, குருணாகல்; விஸ்தீரணம் : 0.1029 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 131**
காணியின் பெயர்: கொலபெலெல்லகந்தவத்த; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் நிரந்தரக் கட்டிடம் ; உரிமை கோருவோர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: எம். ரி. நுவான் கேதல் பெரேரா, இல. 115, கொழும்பு வீதி, திவுலபிற்றிய; விஸ்தீரணம் : 0.4428 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி பொல்கஹாவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி முதல் என்னால் அறிவிக்கப்படும் திகதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் தாமாகவோ அல்லது காரியக்காரர் மூலமாகவோ எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்,
2018, ஓகத்து 02.

08 - 715

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், நிவிதிகல பிரதேச செயலாளர் பிரிவில் நவதுன் கோரலையில் மெதபத்துவ சிறு பிரிவில் நிவிதிகல கிராமத்தில் அமைந்துள்ள அ. க. சி. 36 மேல் ரதாலியத்த, ரதாலியத்த அஸ்வெத்தும, மஹகும்புர அஸ்வெத்தும பெயரையுடைய காணி அரச பொது விடயம் சம்பந்தமாக நிவிதிகல பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்வது சம்பந்தமாக காணி எடுத்தச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் இலக்கம் 1622/23 மற்றும் 2009/10/07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 1980/28 மற்றும் 2016/08/16 ஆந் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகை மூலமாக திருத்தம் செய்யப்பட்ட திருத்தப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட "ஆதன உரிமை பரீட்சை மீண்டும் 2018.10.08 ஆந் திகதி நேர்முகமாக நடாத்துவதாக இங்கே அறியத்தருகிறேன்".

பிரதேச செயலாளர்,
நிவிதிகல.

08 - 716

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.